110

கிராமபோன் கீர்த்தனக் கோர்வை.

S. V. சுப்பையா பாகவதர்

அவர்கள் பாடிய புதிய பாடல்கள்.

SRI VAS,

KUMBAKONAM.

SRI
...nakshi Amman Press,
KUMBAKONAM.

விலை அணா 2.

2 SEP 1930
NR21
N30
177698

புதிய ஸ்டாக்! விலை நயம்

எங்களிடம் ஸ்டேஷனரி ஸாமான்களு[illegible] பியான்ஸி டாயிஸ் தினுசுகளும், பெட்ரோ மாக்[illegible] லைட், ஸ்பேர் பார்ட்ஸ்களும் எலக்ட்ரிக்லைட் ஸாமா[illegible] களும் ஸென்ட் சோப்பு வகையராக்களும் மொத்[illegible] மாயும் சில்லரையாயும் நயமான விலைக்குகிடைக்கு[illegible]

A. R. R. Nagaraja Rao.
GENERAL MERCHANT,
KUMBAKONAM.

எண்சாணுடம்பிற்கு சிரசே பிரதானம்

சிரசிற்கு ஆதாரமாகிய மூளை, கண் இவைகளை குளிர்ச்சி யாயும், பிரகாசமாயுஞ் செய்துகொள்ளச் சிறந்தது

பூபதி தைலம்.

இது முன்னோர்களின் முறைப்படி உயர்ந்த வேர்கள், நறுமண புஷ்பங்கள், அரிய மூலிகைகள் சேர்த்து, நேயர்களின் ஆதரவைக்கோரி, மிக்க ஸ்ரமத்துடன் தயாரித்திருக்கிறது.

அதிகாலையில் இதை உச்சியில் தேய்த்து ஸ்நானம்செய்யவும் வாரம் இருமுறை தைல ஸ்நானத்திற்கு இதை உபயோகித்துவந்தால் மூளை, கண்கள், நரம்புகள் சம்பந்தமான நோய்களும் உஷ்ணத்தாலுண்டாகும் வியாதியை போக்குவதுடன், மயிரையும் கருக்கச்செய்யும்

கிடைக்குமிடம்:—ராமா அண்டு கோ,
சோலையப்பமுதலித்தெரு, கும்பகோணம்.

புத்தகம் கிடைக்குமிடம்:-ஸ்ரீநிவாஸன்,
பத்மநாபத்தெரு, கும்பகோணம்.

உ

ஸ்ரீராமஜெயம்.

கிராமபோன் கீர்த்தனாமிருதக் கோர்வை.

சங்கீத வித்வான் S. V. சுப்பையா பாகவதர்

பிளேட் நெ 2865. காமசுந்தராங்கி உனது.

(பாகம் 1 and 2) தன்யாசி ராகம்.

பல்லவி.

(1) காம சுந்தராங்கி உனது காதலோங்கியே
மன முருகுது அறிகு வாயடி (கா)

அநுபல்லவி.

கட்டுப் பட்டேன் கடைமலர்
பட்டுக் கெட்டுத் தடுமாறினேன் (கா)

கடுந்துயரம் மிகுந்ததி
இளங்குயில் கள் தரும்
கொடுந்து யாமது (கா)

கட்டுப் படவிருதனமதை
யிட்டுக் கிடு நெறிதாவிது (கா)

கவிக்குளுயர் பாவிமனமே
படுத்தடி சுகப்படவே
நிலைத்திடுவோம் மலரணையில் (கா)

தேரின்மீது மேற்சிறந்து
திகழ்திட வதாங்குளிர
புகழ் தருகுவாய் சுகம் பெருகிட (கா)

வண்டு மொய்த்திட்ட மலர்க் கூந்தலாளே
மாமதியை நிகரும் முகத்தாளே
ஒண்டுமத கஜமுறு மகத்தாளே
உடல் பொரு ளுயிர் சகலமும்
உனதிட மது வருள் பெருகிட (கா)

பிளேட் நெ. 283ා. கற்பிற் சிறந்த எந்தன்கனியே.

(பாகம் 1 aud 2) இராகம் காபி.

பல்லவி.

(2) கற்பிற்சிறந்த எந்தன் கனியே அருங்கனியே
பெரும்துணையே அருந்துணையே (க)

அநுபல்லவி.

அற்புதமஹிமையை அறிந்த உன்குணமே
ஐயோ எனைவருத்தல் வருந்துணைவீணமே
நற்பயன் தருமாயர் குலர்த்தமைக்குணமே
நம்பிவிடுத்தேன் எந்தன தேவி
நானேபாவி உயிர் மேவி
உயிர்மேவி (க)

சரணம்.

செல்வச் சிறப்பிழந்து சிறமப்பட்டோமே
தேவடியாள் கடனால் சிறமமுற்றோமே
வல்வினைப் பயன்வந்து வழிதடுத்தானே
வந்தநமக்கு இந்தக் காலம்
நல்ல கோலம்
தனசீலம் அலங்கோலம் (க)

பிளேட் நெ. N 1721. குதம்பைசித்தர் பாடல்.

இராகம் காபி. தாளம் மிஸ்ரகதி—சாப்பு.

(3) மாங்காய்ப் பாலுண்டு மலைமேலிருப்போர்க்கு
தேங்காய்ப் பாலேதுக்கடி குதம்பாய்
தேங்காய்ப் பாலேதுக்கடி.
சத்தியமான தவத்திலிருப்போர்க்கு
உத்தியோகமேதுக்கடி குதம்பாய்
உத்தியோகமேதுக்கடி.
தாவாரமில்லை தனக்கொருவீடில்லை
தேவாரமேதுக்கடி குதம்பாய்
தேவாரமேதுக்கடி.
வெட்டவெளியிலே மெய்யென்றிருப்பார்க்கு
பட்டயமேதுக்கடி குதம்பாய்
பட்டயமேதுக்கடி.

பிளேட் நெ. 2465 எந்த மானிடவேடர்.

இராகம்-சங்கராபரணம்.

(4) எந்த மானிடவேடர் நீர்காண் உமதுவேட்டைக்கு
எற்றமான் அம்மலையிலுண்டே
இந்தமான் நம்பி தந்தமான் உமதுவலைக்கு
அகப்படாதமான் இளையமான்
அந்தமான் நல்ல சவுரியமான்
தைரியமான் அதிவீரமான்
சொந்த அம்மான்மகன்போல் எதேதோபேசுகிறீர் என்
தோழிமானைவிட்டு விரட்டுவேனே.

பிளேட் நே. N 1721

இராகம்-சங்கராபரணம். தாளம்-ரூபகம்.

(5) மகிமை நீ தெரிய தரமா (மகி)

(அநுபல்லவியிலிருந்து எடுப்பு)

அகிதலோக பாசிங்காரி
அணங்கைபே டொக்கமைந்தபாரி லோககாரி
இருவிதபுவிகாரி
யும்மைப் பிரிதிவிநேச மீனாக்ஷி
உலகம் பரவும் திருபழத்தொருவன்
தருவன் பிடிநடை
உருதம்படி எதிர்மறை பாவைஅந்தோ
கலகம் பெருகுந் தவரிடை
அமிர்தம் பெருகுந் திடைமுறு
கான மோகனே விநோத
ஞானு பாக பானுஞான
நம்பி வந்தேன் நிஜமே
மனதுக்கேற்றால் வருவேன்சாமி (மகி)

வாலை குஞ்சாதி மனு
நூலையொரு கோதிமுறை
வாசகர் சந்தோஷமொடு மேவிவந்தானசுகம்
சோலைதொறும் தாவுகுயில் பேரலிதம் பாடுபவள்
சோதிதரும் பூர்ணச்சந்தி
ரோதய சிங்காரமொடு (மகி)

பிளேட் நே. N 2405 காயாத கானகத்தே.

இராகம்-பைரவி

(6) காயாதகானகத்தே நின்றுலாவும் நற்காரிகையே அது
மேயாதமான் புள்ளிமே வாதமான் விழிமான்
சாயாதகொம்பு இரண்டு நிமிர்ந்திருந்தாலும் தலைநிமிர்ந்து
பாயாதமான் வந்ததுண்டோ உந்தன் பார்வையிலே.

பிளேட் நே. 2742 பூங்கா விநோதமே.

இராகம்-ஹரிகாம்போதி.

பல்லவி.

(7) பூங்கா விநோதமே
புகலவொண்ணுதவர் மாதவ (பூ)

அநுபல்லவி.

புத்திக்கும் எத்திக்கும்
விளையவொரு (பூ)

பொங்கும் தங்கும் பரிமள
துங்கம் தங்கும் மகிழ்பெற (பூ)

பொன்னுலகம் தன்னுருவாய்
அவர்தரு மின்னிலமாய்
மன்னர்களும் மகிழ்பெற (பூ)

ஊருக்கு மேவிய
பேருக்கு லாவிய
சீருக்கும் யாருக்கும் ஜீவிய (பூ)

புனிதப் படு மலர்
இனிதுக் கிட முயர்
கனிதக் கட மயர்
வனிதைத் திட முள (பூ)
பாங்கான சோலை காட்சி
பற்பல வற்புத இற்புத காட்சி (பூ)

பிளேட் நே. 2742 தாரணியில்.

இராகம்-தேசிகத்தோடி.

பல்லவி.

(8) தாரணியில் அன்புகொண்ட
தங்கையைக் காணேன் நான் (தா)

அநுபல்லவி.

தங்கையைக் காணேனே
இனி இங்குயிர் பூணேன் (தா)
நேரில்என்னைத் தேடினுள்
நெஞ்சமிக வாடினுள்
ஆறுமற்ற பாவியானேனே
அபலையோடு நான்அப்பா (தா)

பிளேட் நே. N 2239 சாரதாமணி.

இராகம்-சுருட்டி. தாளம்-ஆதி.

பல்லவி.

(9) சாசபூராணி கல்யாணி (ச)

அநுபல்லவி.

தருணிவாச மிகுவேணி (ச)
சுரவிநோத கலைவாணி
ஜோதிவாணிலா காய் கொடூமே
சுடும் சுடும் பயம் தரும் இதுததி (ச)
அமரினர்துதிசெய் அரசிஉன்னை
ஆதரிக்கிறேன் நீ மதிக்கவே
ஆகம் பொருந்திடும் இது தருணமோ (ச)

பிளேட் நே. 2239

இரண்டாம் பக்கம்.

(10) மனநிலையதுகெட மதம்பெறமயங்கி நீ
என்னை விடுவதுமல்ல சரியல்லததிஉயர்
வனத்தரேருரு சுகமாரி
மணமில்லாதயோர் துணையில்லாததேன்
மஹிமைபெருக உமையெனதிகழ்சுகாய (ச)

பிளேட் நே. 2888 காதலின் பாக்கியம்.
(பாகம் 1 and 2) இராகம்-சமா.

பல்லவி.

(11) காதலின் பாக்கியம் கதிதரும் யோக்கியம்
காணுவாய் இன்பமே சிலாக்கியம்
பெரியோர் வாக்கியம் (கா)

அநுபல்லவி.

ஆதலினலெனை ஆதரிப்பாயே கண்மணே (கா)

சரணம்.

பேதலிக்காதே உன்னை
பிரிந்திட்டேன் சத்யமிதே
பேசும் மதனயோக பூசிதம் செய்வோமதை
ஈடில்லா பாஸ்கரன் சொல்
தேவியே என்னுவியே (கா)

பிளேட் நே. 2972 சிங்காரி. இராகம்-தோடி.

பல்லவி.

(12) சிங்காரி ஒய்யாரி (சிங்)

அநுபல்லவி.

ஜெகத்தை மயக்குமிந்த
முகத்தை படைத்திட்ட (சிங்)
சேவை தந்திடவந்த
பூவை யிங்கிதபரிமள (சிங்)
சீனியுடன் முக்கனி
தேனும் கலந்தமொழி
வாளுமிவளையினி யானுதரிசித்திடத்தக்க (சிங்)
சித்தரு முத்தரு
நித்த மதித்திடும்
உத்த மருத்துவ
வித்துவ ரின (சிங்)

சரணம்.

பங்கேருகன் கைதேர்ந்து படைத்திட்ட ராணியாம்
பருவத்திருவுருவில் பாக்கியகல்யாணியாம்
மங்காத சங்கீதத்தில் மஹிமைக்கோர் வேணியாம்

மனதுக்கு நீ யே மயிலாள்
கனத்துக் குயிலு மிவளால் இவளே
வஞ்சிக்கும் தென் கூடல் பாஸ்கர
சொர்பொருளர்ப்புத விற்பனையான (சிங்)

பிளேட் நே. 2972 கட்டிக்கரும்பேதேனே.

இராகம்-அடாணு தாளம்-

பல்லவி.

(13) கட்டிக்கரும்பே தேனே
கனியே மோஹினிமானே (க)

அநுபல்லவி.

அட்டிசெய்வதேன் அருள்விழியாளே
பாருயிர் தர்மந்தனை விழியாளே
மட்டிலாத மொரு மதவிழியாளே (க)

பாரிலுனை வணங்கிடும் ததிசு குமாரி
இளம்பாங்கு மிகு வரத நேரில்
எனதருமை தெரியாமலே
இனிக்கருணை யுதிக்கும் தமிழ் பாஸ்கர (க)

பிளேட் நெ. 2768 அப்பனே நீயேகதியே.
(பாகம் 1 and 2) இராகம்-செஞ்சுருட்டி.

பல்லவி.

(14) அப்பனே நீயேகதியே நீதான்கதியே (அ)

அநுபல்லவி.

தூயநின் தெரிசனத் தொடர்ந்தெனையழைக்க
தாண்டிய நெற்பயிர் துரிதத்திற்தழைக்க
மாலையர் நாக்கரும் மலர்பதம் யான்தொழ
மகிழ்வேயூன்றிட என்மனத்தே
சொற்பனத்தே வரும்நீயே கதியே (அ)

நாளைக்கு நாளைக் கென்றே தினம் கழியுது
ஞானசபையை எண்ணில் ஆநந்தம் பொழியுது
வேளைக்குதவிசெய்ய வேறுச்சிலம்பழியுது
விரட்டா துயர் காட்டா
நதிக்காட்டும் பாபாட்டும் பாதமே (அ)

பிளேட் நெ. 2714 நல்வாக்குத் கோடடி.
இராகம்—காபி

(15) நல்வாக்குநீ கொடடி நான்சிலம்பு விற்றுவாரேன்
பத்தினிப்பெண்ணே (நல்)
செல்வாக்குடனிருந்தோம் தேவடியாள்கடனுல்நொந்தோம்
பத்தினிப்பெண்ணே (நல்)
தேங்காயுடைந்துவிடும் திருவிளக்குநின்றுவிடும்
மாங்காயழுகிவிடும் மல்லிகைப்பூவாடிவிடும்
அம்மா செம்புஜலங்குறையும் சேர்த்தசந்தணமுலரும்
வம்பாய்பெட்டியுடையும் வைத்தஅடையாளங்கள்
அதுமாறுமல் தானிருந்தால் நான்
செத்துமடியாமலே திரும்பி
வருவேனடி பத்தினிப்பெண்ணே (நல்)

பிளேட் நே. 2607 கொஞ்சம் சங்கடமா.

இராகம்-ஆனந்தபைரவி

பல்லவி.

(16) கொஞ்சம் சங்கடமா வந்து
கோலாகலமானல்—லீலைசெய்யாமலே (கொ)

அநுபல்லவி.

செஞ்சரியச் சொன்னேன் பஞ்சணைமீது
நித்திரை யேது நினைவு மாறுது

கொஞ்சல் கிளி உன்னைக் கொஞ்சிடத் தூது
தேடுதே உந்தனை நாடினபோது

தினையளவும் கருணையுடன் பாராயோ மகனே
தனியரசும் பெறவுனிடம் தாரானே நானே

சித்தத்தே மிகு மற்புத முத்துச்சாமிக் கவிப்படி
வைத்திட்டானை யுரைப்பது பொயத்துபோமென கிற்பது

சீலமா அநுகூலமா நல்லகாலமா
ஜெக ஜாலமா பெண்ணே
தீராதடி என் பழிவரும்
நேரா யுணர் உனதென்பது

தினதினில் கணத்தினை
உலகத்தினில் கழிக்கிறேன் (கொ)

 பிளேட் நே. 1904. இராகம்-கமாஸ் தாளம்-ஆதி

பல்லவி.

(17) பாமா கதவைத் திறப்பாய் அன்பான சத்ய
பாமா கதவைத் திறப்பாய் (பா)

அநுபல்லவி.

பூமண்ட லத்துகித்த சீமாட்டியான சத்ய
பாமா கதவைத்திறப்பாய் அன்பான சத்ய (பா)

சரணம்.

தித்திக்கும் செந்தேனே செவ்வரி கண்மானே
இத்தனை வர்மமாகுமா இதுவும் தர்மமோ அவன்
சென்ம கர்மமோ அன்பான சத்ய (பா)

அமிர்தமும் விஷமாம் அளவது மீறிடில்
ஆகையால் இத்தனை மோடி ஆகுமோ என்னடி
ஆலோசிப்பாயடி அன்பான சத்ய (பா)

பிளேட் நே. 2610 சனிதோடி தேவே.

இராகம்-ஹரிகாம்போதி.

பல்ல்வி.

(18) சனிதோடி தேவே ஓ மனஸா (ச)

அநுபல்லவி.

கனிகாமுதோ கனிகாமிடி சிர
காலமுஸஙிக மநுபவிம்ப வேகமே (ச)

சரணம்

பதிலுலப்ரோசே பட்டாதி காருணி
பரமார்த்தமதவி சிஷ்டானு ஸாரினி
த்யுதிநிர்ஜ்ஜித் சதசம்ப ராரிணி
துரிணத்யாக ராஜ ஹருக்சாரிணி (ச)

பிளேட் நே. 2714 சுருளிமலை.
இராகம்-செஞ்சுருட்டி.

(19) சுருளிமலை மீதில் மேவும் சிலா
உன்னை ஸ்தோத்தரித்தேண
சுப்ரமண்யா வேலா நல்ல
தோகை மயில் மீதிலேறி
வாருடனே காத்தருள்வாய்
துய்யா முருகையா
கண்ணியமுடனே பலநாளும்
மச்சக் காவடி உன்

பிளேட் நே. 2513 சாந்தமுலேக.
(பாகம் 1 and 2) சாமா இராகம்.

பல்லவி.

(20) சாந்தமுலேக ஸௌக்கியமுலேது
ஸாரஸதள நயந (சா)

அநுபல்லவி.

தாந்துனிகைனவே தாந்துனிகைன (சா)

சரணம்.

தாரஸுதுலுதந தான்யமுலுண்டின
ஸாரெகுஜெபதப ஸம்பதகல்கின (சா)
ராஜாதிராஜஸ்ரீ ராகவத்யாக
ராஜவிநுதலாது ரக்ஷகதனகுப (சா)

பிளேட் நே 2469 விருத்தம்.

(21) நாற்பது வேலிபூமி நடவுநட் டாகவில்லை
பார்ப்பது மில்லைசைவப் பழமதுதின்ருய் பண்ணே
கார்ப்பது மில்லையுன்னைக் கைவிட மனதுவல்லை
சேர்ப்பதா லாவதில்லைச் சேரியிற் றெலைந்துபோடா

பிளேட் நே. 1750 அன்னமே.
இராகம்-தேசிகதோடி. தாளம்-ஆதி.
பல்லவி.

(22) அன்னமே நான் தாலிகட்டி
அன்றுவந்த நாள்முதலாய் (அ)

அநுபல்லவி.

இன்னமும் வீட்டுக்கு போகவில்லை
பத்தினி கர்னகை மாண்டாளென்று
காகிதமும் வந்த தின்று
கண்கலங்கி நோகலானேன்
பெண்ணணங்கே போய்வாரேன் (அ)
இந்தவேளை உத்திரவு
தந்தனுப்ப வேணுமடி

சரணம்.

எந்தன்சாதியார்கள் கூடிவந்திருப்போர்கோடானுகோடி
சுந்தரிநான் போகாவிட்டால் பந்திபோஜனம்விலக்கி
எந்தனை ஏசுவார்கள்மேலும்
அவளுக்குக்கொள்ளி வைக்க
மைந்தன் தானங்கேது வேணும்
வேணும்உத்திரவு தந்தனுப்பவேணுமடி (அ)

பிளேட் நே 2809 சாதிகுல
இரகம்-கரகரப்பிரியா விருத்தம்.

(23) சாதிகுலப் பிறப்பென்னும் சந்தேகம்தெளியாது
தனாக நிற்கும்
பேதகுணம் பற்றறுத்துப் பேரின்பம்வருஷித்துப்
பேணிகாக்கும்
ஆதிபராபரமெனும் திருச்சிற்றம்பலத்தைக்
கண்டானந்திக்க
வேதமொழி விளங்கிவருந் திருவாயால்
விடைகொடுக்க வேண்டுமையே

பிளேட் நே. 2510 இராகம்-தன்யாசி தாளம்-ஆதி. பல்லவி.

(24) நிச்சயமாய்த் தீர்க்கக்கட னுக்குவழிதோன்றவில்லை
நீ தாளுெரு மார்க்கம் சொல்லடி (நிச்)

அநுபல்லவி

கச்சைகட்டி ஆடும்தாசி இச்சைகொண்டேன் மகாதோஷி
லஜ்ஜையுற்றேன் ஆராரேசி மிச்சம்நிந்திப் பாரலோசி (நிச்)

சரணம்

பெண்டுபிள்ளை முன்கால
கண்டையருக் காிச்சந்திரன்
பிரியமாய் விற்ற தெதற்கு
பின்பவன் பறயனுக்கு
கடிமையாகி அங்குவந்த
பிரேதங்களை சுட்ட தெதற்கு
கொண்ட கடனுக்கு சத்யம்
குறைவுபடாத தற்கும்
அண்டினு னல்லாமல் வேறே
அவனுக்கென்ன எனக்கும் (நிச்)

பிளேட் நே. 2607. கண்மணியான ருக்குமணி. பல்லவி.

(25) கண்மணியான ருக்மணி உனக்கிதை நான்
கையார சூட்டுவேனினி கருதிடுமென திரு (கண்)

அநுபல்லவி.

அன்மை அநேகரேனும் அஷ்ட லக்ஷ்மிகளின்
அன்பு மிகவும் பிரியம் உன் பிரியம் போலவே (கண்)

சரணம்

தேவேந்திர பாரிஜாதம் இதுபோலுண்டோ
பூவேந்திர புவினுேதம் ஆலோசிக்கையில் (கண்)
சார்வாஞ்சம் பங்கிட்டு
தங்கச் சீப்பிலே சீவி
சேர்வேன் உன் கொண்டையிலே
பார்வை ஒய்யாரமாக (கண்)

பிளேட் நெ. 2809 தில்லையம்பல.

இராகம்-மாஞ்சி. தாளம்-ரூபகம்.

(26) தில்லையம்பல ஸ்தலமொன் றிருக்குதாம் கண்டபேர்க்கு
ஜனன மரண பிணியைக் கருக்குதாம் (தி)

உயரஞ்சிகரக் கும்பம் தெரியுதாம் பார்த்தபேர்க்கு
உள்ளங் குளிரக் கருணை புரியுதாம் (தி)

போய்வருக வுத்தாரம் தாருமே பொன்னடித்தாள்
போற்றுவேன் திருக்கண்ணால் பாருமே (தி)

பிளேட் நெ. 2972 சொல்லும் வார்த்தையை

இராகம்-சுருட்டி தாளம்-ரூபகம்

பல்லவி.

(27) சொல்லும் வார்த்தையைக் கேளம்மா தள்ளாதம்மா
சொல்லும் வார்த்தையைக் கேளம்மா (சொ)

அநுபல்லவி.

அல்லும் பகலும் இந்த அவஸ்தையை நீ விடுத்து
அவனியில் தொழிலற்று இருப்பாய் நீ செவிகொடுத்து (சொ)

சரணம்.

உனக்காகவே நான் சொன்னேன்
ஓகோ இந்த க்ஷணமே
மனக்கவலை கொள்ளாதே
மாநிலத்தி யல்புதான் (சொ)
வேறொரு வருக்காக
வேண்டினேன் இல்லையம்மா
ஆறுமுகனே சொந்த உன்
ஆசை மணாள னம்மா (சொ)

177698
177698

பிளேட் நெ. 1782 உத்தாரந்தாருமையே.

இராகம்-தோடி. தாளம்-ஆதி

பல்லவி.

(23) உத்தாரந் தாருமையே எனக்
கொருவருமில்லை பரகதியடைய (உத்)

அநுபல்லவி.

வித்தைகள் கற்றதுமில்லை யாநொரு
பக்தியிற் சென்று பரகதியடைய (உத்)

தில்லைச்சிதம்பரத்தை தெரிசித்து வந்துங்க
ளெல்லையை காத்துக்கொண்டி ருக்கிறேனையா (உத்)

பெண்டுபிள்ளை யென்று பேயனைப்போலவே
கண்டுகளித்து நான்காலங் கழித்திருந்தேன் (உத்)

முற்றிற்று.

புதிய பாடல்கள் அமைந்த

கிராமபோன்

கீர்த்தனாம்ருதக் கோர்வை

இரண்டாம் பாகம்

கூடிய சீக்கிரம் வெளிவரும். அவசியம் பார்க்கவும்.

ஸ்ரீ காமாக்ஷி அம்மன் பிரஸ், கும்பகோணம்.

N. R. S. தைலம்.

(வெளிப்பிரயோகத்திற்கு)

1. பாலர்களுக்குவரும் வயிற்று உப்புசம், வயிற்றுவலி, இருமல், ஜல தோஷம், தெற்கித்திக்கணை, ஜன்னி, வலிப்பு இசிவுகளுக்கு இதை உள்ள ங்கை, உள்ளங்கால், வயிறு, தொண்டை, பிடரி முதலிய இடங்களில் தடவி சூடுண்டாகத் தேய்த்து வெந்நீரால் ஒத்திவிட சீக்கிரம் குணமாகும்

2. வீக்கத்துக்கும், வீக்கத்தினுலுண்டாகும் வலிக்கும், அண்டவாய்வ களுக்கும், கைகால், கணுக்காலில் உண்டாகும் வலிக்கும், ஓடி ஓடி வீங்கிச் சிவந்து புரையோடும் கட்டிகள், கண்டமாலை, பிளவை, அறையாப்பு, துடை வாழை, பௌத்திரங்களுக்கும், சீழ் வைக்குமுன் மூன்று மணிக்கோர் தட வை இதை தடவி சொற்பச் சூடுள்ள சாம்பல் கட்டிவைக்க மூன்று நாளுக் குள் வீக்கம் வற்றி வலியும் நிற்கும்; கட்டிகள் அமுங்கிப்போகும்.

3. பலவித ஜன்னிகளுக்கும், வாந்திபேதி காலத்திலுண்டாகும் இசி வுக்கும் இதை தடவி சூடுண்டாகத் தேய்த்து தவிடாவது மணலாவது வறுத்து ஒத்திட குணமாகும்.

4. தலைக்கனம், தலைவலி, ஒரு தலைநோய்க்கு இதை தடவினுல் உடனே சுகமாகும்.

5. சூதக வயிற்றுவலிக்கும், இசிவு முதலிய வாயுவினுல் உண்டாகும் மற்ற வலிகளுக்கும், கர்ப்பிணிகளுக்குண்டாகும் இசிவு முதலிய வலிகளுக் கும் இதை 2 மணிக்கு ஒருதடவை தடவ சீக்கிரத்தில் சுகமுண்டாகும்.

இதன் விலை அணு 6.

கிடைக்குமிடம்:—ராமா அண்டு கோ,

சோலையப்பமுதலித்தெரு, கும்பகோணம்.

தற்காப்பே தகுந்த வைத்தியம்.

எவரும்
ஸ்வயமாய் கவனித்துக்கொள்ளவேண்டியதில்
தலைசிறந்தது தம்உடலும், அதைத் தக்கபடி
நடாத்திச் செலுத்தவல்ல தம மனமுமே.
அவற்றை

குளிர்ச்சியோடும் களிப்போடும்

வைத்திருத்தல் அவசியமல்லவா?
பிரபல டாக்டர்களால் சிபார்சு செய்யப்பெற்று,
தனவைசிய மண்டலத்தாரால் ஆதரிக்கப்
பட்டு, உள்ளபடி உண்மையை அறிந்த
நம் சகோதர சகோதரிகளால்
பெரிதும் விரும்பப்படுகிறது

ரெங்கா ஷர்பத்தே.

T. V. ரெங்கா அன் ஸன்ஸ்,

கும்பகோணம்.